**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ்., எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**2024 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 09-ஆம் நாள் திங்கள்கிழமை**
**அசல் வழக்கு எண் (O.S.) 60/2023**
**CNR.No.TNAL05-000049-2023**

விஸ்வநாதன், வயது 72/23
த/பெ. நடேசன்,
கீழத்தெரு, த.சோழன்குறிச்சி கிராமம்,
உடையார்பாளையம் தாலுக்கா, ... வாதி

//எதிர்//

1. வேம்பு, வயது 42/23
க/பெ. பழனிவேல்,
தெற்குதெரு, அழிசுகுடி கிராமம்,
பருக்கல் மதுரா,
உடையார்பாளையம் தாலுக்கா,
அரியலூர் மாவட்டம்.
2. சங்கரன், வயது 36/23
த/பெ. காசிநாதன்,
கீழத்தெரு,
த.சோழன்குறிச்சி கிராமம்,
உடையார்பாளையம் தாலுக்கா,
3. சார்பதிவாளர்,
உடையார்பாளையம்.
4. மாவட்ட ஆட்சியர்,
அரியலூர். ... பிரதிவாதிகள்

| | |
|---|---|
| வழக்கு தாக்கல் நாள் | : 14.02.2023, 04.03.2023, 14.03.2023. |
| வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : 14.03.2023. |
| வழக்கு மூலம் ஏற்பட்ட நாள் | : 20.09.2022. |
| இடம் | : த.சோழங்குறிச்சி கிராமம். |

நீதிமன்ற முத்திரைக் கட்டணத்திற்கும் அதிகார வரம்பிற்கு தாவா சொத்திற்கான செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு மதிப்பு ரூ.1000/-ம் இதற்கு வாதியிடமிருந்து தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டணச் சட்டம் பிரிவு 27(c)-ன் படி ரூ.30/- செலுத்தப்பட்டுள்ளது.

நீதிமன்ற முத்திரைக் கட்டணத்திற்கும் அதிகார வரம்பிற்கு தாவா சொத்திற்கான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு மதிப்பு ரூ.1000/-ம் இதற்கு வாதியிடமிருந்து தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டணச் சட்டம் பிரிவு 27(c)-ன் படி ரூ.30/- செலுத்தப்பட்டுள்ளது. (ஆக மொத்தம் நீதிமன்ற முத்திரை கட்டணமாக ரூ.60/- செலுத்தப்பட்டுள்ளது).

வாதியின் தாவா சொத்தினை 1,2 பிரதிவாதிகள், 3ம் பிரதிவாதி அலுவலகத்தில் பத்திர பதிவு செய்து கொடுக்க ஒரு செயல் உறுத்துக்கட்டளை பரிகாரமும், தாவா சொத்தினை பிரதிவாதியோ, அவர் ஆட்களோ எவ்வித இடையூறுகளோ, இன்னல்களோ, ஆக்கிரமிப்புகளோ, பத்திரப் பதிவுகளோ, செய்யாது இருக்க அவர்களுக்கு எதிராக ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி வாதிக்கு செலவுத் தொகையுடன் தீர்ப்பும், தீர்ப்பாணையும் வழங்கி நீதி வழங்க வேண்டுமென்று உ.வி.மு.ச.கட்டளை VII விதி 1-ன் கீழ் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கு என் முன்பாக 07.08.2024 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்ததில் வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.உ.விஜயன், அவர்கள் ஆஜராகியும், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.வேல்முருகன், அவர்கள் ஆஜராகியும், 3,4 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 3,4 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் தோன்றாதரப்பினர்களாக கருதப்பட்டும், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் வாதியை குறுக்குவிசாரணை செய்ய 1,2 பிரதிவாதிகள் ஆஜராக வேண்டி வழக்கானது ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததாலும், 1,2 பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகாததால் 1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, வாதி தரப்பு வாதம் கேட்டும், வாதி தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்பாணை

1. வாதியின் வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பாணைப் பிறப்பிக்கப்படுகிறது.
2. வழக்கின் செலவுத் தொகையை பொறுத்து வழக்கின் தன்மையைக் கருத்தில் கொண்டு அவரவர் செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

## செலவுத் தொகை

**- இல்லை -**

## சொத்துவிபரம்

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், த.சோழங்குறிச்சி கிராமம், புஞ்சை புல எண்.118/2A2-ல் 0.35.23 ஏர்ஸில் பாதி 0.17.62 ஏர்ஸ் நிலம். இதற்கு நான்கெல்லை: வாதியின் புஞ்சைக்கும், மேற்கு, சாமிநாதன் நிலத்திற்கு தெற்கு, செங்குட்டுவன், ராமலிங்கம், தையல்நாயகி நிலத்திற்கு வடக்கு, ரோட்டிற்கு கிழக்கு தற்போது புதிய புல எண்.118/2A2A ஆகும்.

இத்தீர்ப்பாணையானது 2024ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 09-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்படுகிறது.

(ஒம்/-திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி(மு.கூ.பொ),
ஜெயங்கொண்டம்.